Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY, JANUARY 22, 2024

திங்கட்கிழமை ஜனவரி 22, 2024 | ஒளி: 10 கதிர்: 176 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# தமிழரசு கட்சியின் தலைவரானார் ஸ்ரீதரன்



வடமலை ராஜ்குமார்

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழரசுக் கட்சிக்கு தலைவரை செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு திருகோணமலை நகரமண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம் பெற்றது. இதில், 327 பேர் கலந்து கொண்டு வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

இதில், பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகளை பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

# அயோத்தியில் ராமர்...



உத்தரப் பிரதேசம் மாநிலம் அயோத்தியில் ராமர் சிலை, ஞாயிற்றுக்கிழமை (21) பிரதிஷ்டை செய்யப்பட்டது. கோயில் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை (22) நடைபெறுகிறது.

முழுச் செய்தி P6

# “நாட்டில் செயற்படுவது பொருளாதார- பயங்கரவாதம்”



இராணுவ வீரர்கள் எமது நாட்டை பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றினார்கள், ஆனால், இன்று எமது நாடு பொருளாதார பயங்கரவாதத்தை எதிர்கொண்டுள்ளது. நாட்டில் தற்போது பொருளாதார பயங்கரவாதமே நிலவி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தமிழ் மக்களின் உரிமைகளுக்காக

# “இணைந்து செயற்படுவேன்”

## தமிழரசு கட்சியின் புதிய தலைவர் ஸ்ரீதரன் சூளுரை

கனகராசா சரவணன்

இலங்கை தமிழரசு கட்சியினுடைய வரலாற்றிலே ஜனநாயக ரீதியான ஓர் உரையாடல் ஊடாகவும் ஜனநாயக ரீதியான செயல்முறையின் ஊடாகவும் முக்கிய வரலாற்றை பதித்துள்ளோம் என்று தெரிவித்த தமிழரசு கட்சியின் புதிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன்

என்னுடன் போட்டியிட்ட எம்.ஏ. சுமந்திரன் சீ.யோகேஸ்வரன் இணைந்து கட்சியுடைய செயற்பாட்டினை

தொடர்ச்சி P2



## மத்திய மாகாண பாடசாலைகளில்

# ஏழு நிகழ்வுகளுக்கு மட்டுமே அனுமதி

மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஏழு நிகழ்வுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் என மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மேனகா ஹேரத்தினால் விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# இந்திய முடையும் எகிறியது

## சதொச விற்பனை நிலையங்கள் முட்டை விற்பனைக்கு கட்டுப்பாடு விதித்துள்ளன

சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டை ஒன்றின் விலை 43 ரூபாவாக அதிகரிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதிக்கு

# உகண்டா ஜனாதிபதி பாராட்டு

உகண்டாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி (Yoweri Museveni) ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு சனிக்கிழமை (20) பிற்பகல் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## தேசிய மக்கள் சக்தி

# தலைவர்களுக்கான பாதுகாப்பில் மாற்றம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களின் பாதுகாப்பு தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்டு வந்த பாதுகாப்பு உத்திகள் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

# ஒரு மூடை நெல் 5,700 ரூபாவாகும்



திருகோணமலை மாவட்டத்திலுள்ள தோப்பூர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பகுதிகளில், உல்லைக்குளம், பம்மன்குளம் மற்றும் அதனையண்டிய. நீனாக்கேணி உள்ளிட்ட ஏனைய பகுதிகளில் மானாவாரி நெல் அறுவடை பரவலாக நடைபெற்றுவருகின்றது

இப்பகுதி விவசாயிகள் மழையை நம்பி மானாவாரி நெற்செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## தேர்தலை இலக்காகக் கொண்டு

# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்?

அமைச்சரவையில் அடுத்த மாதம் மாற்றம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் நம்பகமான தகவல்களில் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்த திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இத்திருத்தத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் குழுவிற்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கும் அந்த வட்டாரங்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சுப் பதவிகளுக்கான உறுப்பினர்களின்

தொடர்ச்சி P2

# “வாழ்க்கைச் செலவு கட்டுப்படியாகாது”

- பல நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு
- எதிர்காலத்தில் நாடு வழமைக்குத் திரும்பும்
- சதிகாரர்களின் பிடியில் சிக்காதீர்கள்
- மொட்டு ஆதரவைப் பெற்றவரே ஜனாதிபதி
- எரிக்க போனவர்கள் ஜனநாயகம் பேசுகின்றனர்

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை மக்கள் தாங்கிக் கொள்வது கடினம் என்பதை ஒப்புக்கொள்வதாக ஆளும் கட்சியின் அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# ‘விஸ்வ புத்தர்’ மீண்டும் கைது

தன்னை ‘விஸ்வ புத்தர்’ என்று அறிமுகப்படுத்திக் கொண்ட காவி அங்கி அணிந்த துறவி, பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டதற்காக மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# “100,000 பேர் பதியவில்லை”

18 வயது பூர்த்தியடைந்த 100,000 இளைஞர்கள் குழு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படவில்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# யுவதி மீது தாக்குதல்: இரு சகோதரிகள் கைது



க. அகரன்

வவுனியாவில் யுவதி ஒருவர் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்கள் இருவர், சனிக்கிழமை (20) கைது செய்யப்பட்டுள்ளதுடன், பாதிப்படைந்த யுவதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா- உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கழிவு நீர் மற்றும் வெள்ள நீர் என்பன வீதியில் உள்ள வாய்க்கால் ஊடாக செல்வது தொடர்பில் அப் பகுதியில் உள்ள இரு வீட்டாரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

குறித்த பகுதி வடிகாலமைப்பு சீரற்ற நிலையில் காணப்படுவதாலும், அனுமதியற்ற கட்டிடங்களின் காரணமாகவும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு பிரதேச சபைக்கு, குறித்த வீட்டாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் பிரதேச சபையால் அவை தீர்த்து வைக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

# “உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை மீள பெறவும்”

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்திற்கு சர்வதேச சிவில் சமூக மற்றும் மனித உரிமை குழுக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், இது கருத்து சுதந்திரத்தை கடுமையாக கட்டுப்படுத்தக்கூடுமெனவும், ஜனநாயக விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

தொடர்ச்சி P2

# தமிழரசு கட்சியின் தலைவரானார் ஶ்ரீதரன்



பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஶ்ரீதரன் 184 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கான போட்டியில், மும்முனை போட்டி ஏற்பட்டிருந்தது அதில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. யோகேஸ்வரனும் போட்டியிட்டார். எனினும், வாக்கெடுப்புக்கு முன்னர் இடம்பெற்ற கூட்டத்தின் போது, தான் இந்த போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துவிட்டார்.

வாக்கெடுப்பின் பிரகாரம் 47 மேலதிக வாக்குகளினால், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஶ்ரீதரன், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## "நாட்டில் செயற்படுவது பொருளாதார-பயங்கரவாதம்"

பயங்கரவாதிகள் என்போர் மக்களின் உயிரைப் பறிப்பவர்கள் ஆவர். மத்திய வங்கி மீதான தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதல் போலவே நாட்டின் உழைக்கும் மக்களின் சேமலாப நிதியங்களில் ஏற்படுத்தும் பாதிப்பும் பயங்கரவாதமே என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

களுத்துறையில் சனிக்கிழமை (20) இடம்பெற்ற ஐக்கிய போர்வீரர் சக்தியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இந்திய முடையும் எகிறியது

பெறுமதி சேர் வரி 'வற்' அதிகரிப்பால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 35 ரூபாய்க்கு விற்க முடியாததால் சதொச விற்பனை நிலையங்கள் முட்டை விற்பனைக்குக் கட்டுப்பாடு விதித்துள்ளன. அதன்படி சதொசவில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், சந்தையில் நாட்டு முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# "இணைந்து செயற்படுவேன்"

இன்னும் பல வழிகளில் முன்னெடுத்து எமது மக்களின் உரிமைக்காகத் தேசிய இருப்புக்காகத் தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் தொடர்ந்து பொறுப்போடும் கடமையுடனும் செயற்படுவோம் என்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்றது. இதில் 47 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்ற சிவஞானம் சிறிதரன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

என்னைத் தெரிவு செய்வதற்குக் காரணமாக இருந்த இயற்கை என்னும் இறைவனுக்கும் எனக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அயராது உழைத்த அந்த பொதுச்சபை உறுப்பினர்களின் மிகப் பெறுமதியான வாக்குகளால் தலைவராகத் தெரிவு செய்ததற்கு முதலில் எனது நன்றிகள்.

இன்று இது பலபேருக்குப் பல நம்பிக்கைகளைத் தந்திருக்கின்றது பல இளைஞர் யுவதிகளுக்குக் கட்சி பற்றிய அதிகமான அக்கறை கொள்ளவைத்துள்ளது என்னுடன் போட்டியிட்ட எம்.ஏ. சுமந்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகிய இருவருடன் இணைந்து கட்சியினுடைய செயற்பாட்டினை இன்னும் பல வழிகளில் எமது மக்களின் உரிமைக்காகத் தேசிய இருப்புக்காகத் தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் தொடர்ந்து எங்களுடைய பொறுப்போடும் கடமையுடனும் செயற்படுவோம் அந்த கடமையைச் சரியாகச் செய்வோம் அதற்காகப் பல தடவைகள், பல ஊடகங்கள் ஊடாக எங்களுடைய ஒற்றுமையையும் பலத்தையும் தெளிவுபடுத்தியிருந்தோம் என்றார்.

சுமந்திரன் கூட பலதடவை தெளிவாகப் பல இடங்களில் சொல்லியிருந்தார். ஆகவே, எங்களுடைய பங்கு என்பது இனம் சார்ந்தது, தமிழ்த் தேசியத்தினுடைய இருப்பு சார்ந்தது எங்களுடைய இனத்துக்கான அடிப்படை உரிமைகள் சார்ந்தது அந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் எல்லோரும் எங்களது கடமைகளை ஒன்றாகப் பலப்படுத்துவோம் என்றார்.

## அமைச்சரவையில் அதிரடி மாற்றம்?

பட்டியல் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சர் பதவிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சில நிறுவனங்களை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமென அந்த வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணையைப் பெற்று மக்களுக்குச் சற்று நிவாரணம் வழங்கும் அதேவேளை அமைச்சரவையில் சில திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தலைவர்களுக்கான பாதுகாப்பில் மாற்றம்

அவர்களின் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

புதிய பாதுகாப்பு யுக்திகளுக்கு, முன்னாள் பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் சிலரிடம் ஆலோசனை பெற்று, அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில், புதிய முறைகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கட்சி இதுவரை ஒரே ஒரு பாதுகாப்பு உத்தியை மட்டுமே கையாண்டாலும் அதையும் தாண்டி புதிய வழிமுறைகள் தேவை என்று இந்தக் குழு கருத்து தெரிவித்துள்ளது.

## ஒரு மூடை நெல் 5,700 ரூபாவாகும்

நெல் அறுவடையே தற்போது இங்கு இடம்பெற்று வருகின்றது

நீர்ப்பாய்ச்சலுக்கான நெல் அறுவடை இன்னும் இப்பகுதிகளில் ஆரம்பமாகவில்லை நெற்பயிர்கள் குடலைப்பருவத்தில் காணப்படுகின்றது அறுவடை

இயந்திரம் மூலம் இங்கு அறுவடை இடம்பெற்றுவருகிறது அறுவடைக் கூலியாக ஏக்கர் ஒன்றிற்கு 14,000 ரூபாய் செலவாகிறது. ஏக்கர் ஒன்றிலிருந்து சராசரியாக 10 முதல் 20 வரையான நெல் மூடைகள் கிடைப்பதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

அறுவடையாகும் நெல் ஒரு மூடை நாடு 5,700 ரூபாவாகவும், கீரிச்சம்பா 9,000 ரூபாவாகவும் இங்குள்ள தனியார் நெல் வியாபாரிகள் கொள்வனவு செய்வதாக விவசாயிகள் கூறுகின்றனர். இம்முறை விளைச்சல் போதுமானதாக இல்லையெனவும் தமக்கு நட்டம் ஏற்படுவதாகவும் அறுவடை செய்யும் விவசாயிகள் கவலை கொள்கின்றனர்

நோய் பீடைத்தாக்கம், நெற்சப்பி முதலான களைகளின் பாதிப்பு ஆகியன காணப்பட்டதாலும் மருந்துகள் கூடிய விலைகொடுத்து வாங்கி விசிறியதாலும் இம்முறை போதிய இலாபம் கிட்டவில்லையென விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

# "வாழ்க்கைச் செலவு கட்டுப்படியாகாது"

யுத்த மோதல்கள் காரணமாக உலகின் பல நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாக அமைச்சர் வலியுறுத்துகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார வேலைத்திட்டத்தினால் எதிர்காலத்தில் நாடு வழமைக்குத் திரும்பும் எனவும் அவர் குறிப்பிட்டார். எனவே, எதிர்க்கட்சிகள் மற்றும் சதிகாரர்களின் பொய்களுக்கு மக்கள் ஏமாற வேண்டாம் என அவர் கேட்டுக்கொள்கிறார்.

கம்பஹா ஒருத்தோட்டை நடைபாதை மீள் அபிவிருத்திக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஞாயிற்றுக்கிழமை (21) கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டார். நடைபாதையைப் பயன்படுத்தும் ஒரு குழுவினரின் வேண்டுகோளுக்கு இணங்க இது அமைந்துள்ளது.

இந்த நடைபாதையானது 2011ஆம் ஆண்டு பொருளாதார அமைச்சு மற்றும் கம்பஹா மாநகர சபையினால் உருவாக்கப்பட்டது.தற்போது, பாதையைச் சீரமைக்க வேண்டும் என, பயன்படுத்தும் மக்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டின் பேரில் இங்கு மீள் அபிவிருத்தி ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

**அதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்.**

கேள்வி: சிறிய மழை பெய்தாலும் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கிறது. இவற்றை அபிவிருத்தி செய்யத் திட்டம் இல்லையா?

பதில்: எங்களுக்கு மட்டும் தனியாகச் செய்வது கடினம். மக்களும் அறிந்திருக்க வேண்டும். மக்கள் பல இடங்களில் விதிகளை மீறி கட்டிடங்களைக் கட்டியுள்ளனர்.

கேள்வி- அரசாங்கத்தின் அடுத்த வேலைத்திட்டம் என்ன?

பதில்- கொரோனா காரணமாக நாடு இரண்டு வருடங்கள் மூடப்பட்டது. பின்னர் போராட்டம் வந்தது. ஆனால் கடந்த இரண்டரை வருடங்களில் நாட்டில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

கேள்வி- மக்களுக்கு நிவாரணம் தருகிறோம் என்று சொன்னாலும் ஒரு கரட் கூட சாப்பிட முடியாத நிலை உள்ளது?

பதில்- கரட்டின் விலை அதிகரித்தது வற் வரி காரணமாக அல்ல. பொதுவாக, காய்கறிகளின் விலை குறிப்பிட்ட கால இடைவெளியில் அதிகரிக்கும்.

கேள்வி- இல்லை.. அமைச்சரே, இப்போது வாழ்க்கைச் செலவு அதிகம் தானே?

பதில்- இதை மக்களால் தாங்க முடியாது என்பது உண்மைதான். அதை ஏற்றுக்கொள்கிறேன். தற்போது, உலகின் பல நாடுகளில் யுத்த மோதல்கள் உள்ளன. உலகின் மற்ற நாடுகளிலும் இதுதான் நிலைமை. அடிக்கடி வெளிநாடு செல்லும் அனுரகுமாரக்கு இது தெரியும். ஜனாதிபதி ரணில் தலைமையிலான பொருளாதார வேலைத்திட்டத்தினால் எதிர்காலத்தில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும். எனவேதான் எதிர்க்கட்சிகள் மற்றும் சதிகாரர்களின் பொய்யான பேச்சுக்களுக்கு மக்கள் ஏமாற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

கேள்வி- ஜனாதிபதி அடிக்கடி வெளிநாட்டுக்கு செல்கிறாரே?

பதில்- அவர் நாட்டுக்காக உதவிகளைப் பெறப் போகிறார். ஆனால், அனுரகுமார இந்த நாட்டை அராஜகமாக்கவே வெளிநாடு செல்கிறார். வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கைக்கு பணம் அனுப்ப வேண்டாம் என்கிறார்கள்.

கேள்வி - ஆனால், மக்கள் 225 பேரும் வேண்டாம் என்கிறார்களே?

பதில்- அப்படிச் சொல்பவர்கள் மூன்று சதவீதத்தினரே. அவர்களும் அந்த 225 பேரில் இருக்கிறார்கள். ஜே.வி.பி எப்போதும் நிர்வாகம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறையை தாக்குகின்றார்கள். நாட்டை அராஜகமாக்க பார்க்கிறார்கள்.

கேள்வி - ஐக்கிய மக்கள் சக்தியின் வேகத்தைக் கண்டு அரசாங்கம் அஞ்சுகிறதா?

பதில்- சென்ற தடவை ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் 500,000 வாக்குகளைப் பெற்றார்கள். அது100% அதிகரித்தாலும் 10 இலட்சம் தான். ஆனால் சஜித் பிரேமதாச தோல்வி அடைந்தாலும் 55 இலட்சம் எடுத்தார்கள். புத்திசாலித்தனமான மக்கள் இந்த அரசியல் வாசிப்பைப் தேர்வுகளைப் புரிந்து கொள்வார்கள். ஜே.வி.பிக்கு இப்போது இருப்பது ஃபேஸ்புக் அலை ஒன்று மட்டும்தான்.

கேள்வி- தற்போதைய ஜனாதிபதிக்கு குறைந்தது 500,000 வாக்குகள் இல்லையே?

பதில்- அதனால் தான் நாங்கள் கூறுகிறோம், மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெறுபவரே நாட்டின் வருங்கால ஜனாதிபதி என்று.

கேள்வி- ஆனால், ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கவில்லை என மொட்டுக் கட்சியினர் கூறுகின்றாரகளே?

பதில்- சரியான நேரத்தில் நாட்டை மீட்டெடுக்கும் நபரை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த மனிதர்தான் நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற முன்வந்தார். பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் தொலைநோக்கு பார்வை கொண்டவர். இன்று வாய்ச் சவடால் விடுபவர்கள் அன்று யுத்தத்திற்கும் சிக்கலை ஏற்படுத்தினார்கள். அவர்களின் வரலாறு இப்படித்தான் இருந்தது.

கேள்வி - ஆனாலும் அமைச்சரே இந்த நேரத்தில் மொட்டுக் கட்சி இரண்டு மூன்றாக உடைந்திருக்கின்றதே? இனி எப்படி ஒரே கருத்துக்கு எடுக்க முடியுமா?

பதில் - ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்வதற்கு நூற்றுக்கு 51 சதவீதம் வாக்குகள் வேண்டும். இன்று நாட்டின் தேசியப் பிரச்சினை திருடர்களைப் பிடிப்பது அல்ல தானே. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கும் சவாலை வெற்றி கொள்வதற்கான தலைவர் தான் தற்போதைய ஜனாதிபதி. அதனால் தான் நாங்கள் அவருக்கு ஆதரவு கொடுக்கின்றோம். மொட்டுக் கட்சி எந்த நேரத்திலும் வேலை செய்வது சிந்தித்துத்தான். ஆனாலும் அரகலய போராட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தை தீ வைக்க முயற்சி செய்த மனிதர்கள் இன்று ஜனநாயகம் அற்றிக் கதைக்கிறார்கள்.

கேள்வி- கோட்டாபய ராஜபக்ஷ கொண்டு வந்ததும் நாட்டைப் பற்றி சிந்தித்துதானா?

பதில்- கொரோனாவால், வளர்ச்சியடைந்த நாடுகளில் வீதிகளில் மக்கள் இறந்தனர். ஆனால், எமது நாட்டில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய இடமளிக்கவில்லை. அவர் நாட்டைத் திறந்து மூன்று தடுப்பூசிகளையும் கொடுத்தார். இன்று கூச்சல் போடுபவர்கள் அவரால் தான் உயிரோடு இருக்கிறார்கள்.

கேள்வி- இன்று கோரிக்கைகளை வென்றெடுக்க பேசும் அனைவரையும் அரசாங்கம் தாக்குகிறது.

பதில்- கோட்டாபய ஆர்ப்பாட்டத்திற்கு தனி இடம் கொடுத்தார். இறுதியில் நடந்தது என்ன? அதைச் செய்யக்கூடிய நாடுகள் உள்ளன. மக்களைக் கொல்வதும், வீடுகளை எரிப்பதும் அல்ல ஜனநாயகம்.

கேள்வி- ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்க முடியுமா?

பதில்- கேட்கலாமா? வேண்டாமா? என்று முதலில் அவர் சொல்ல வேண்டும்.

## ஏழு நிகழ்வுகளுக்கு மட்டுமே அனுமதி

சில பாடசாலைகள் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து பெற்றோரிடம் பணம் வசூலிப்பதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு மத்திய மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் முதலாம் தவணையில் மூன்று விழாக்களும் இரண்டாம் தவணைகளில் நான்கு விழாக்களும் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கூடுதலாக ஏதேனும் விழா நடத்தினால் மாகாண கல்விப் பணிப்பாளரிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் தவணையில் மாணவர்களுக்கான புதுமுக விழா, சுதந்திர விழா, இல்லங்களுக்கு இடையேயான தடகள போட்டியும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளில் கல்விச் சுற்றுலா, கலை விழா, ஆண்டு பரிசளிப்பு விழா நடத்தவும் அனுமதி வழங்கப்படும்.

இசை நிகழ்ச்சிகள், ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா உள்ளிட்ட பல்வேறு கொண்டாட்டங்களை நடத்தி அதிபர்கள் உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் பெற்றோரிடம் வரம்பில்லாமல் பணம் வசூலிப்பதாக எழுந்த புகாரின் பேரில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## உகண்டா ஜனாதிபதி பாராட்டு

இதன்போது ஜனாதிபதி ரணிலுக்கு சிநேகபூர்வமான வரவேற்பளித்த உகண்டா ஜனாதிபதி, சிறிது நேரம் சுமுகமாகக் கலந்துரையாடிய பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். தனது அழைப்பையேற்று வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்த உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி, சரிவடைந்திருந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணிலின் தலைமைத்துவத்தைப் பாராட்டியதோடு, அதற்காக நாட்டு மக்களின் பாராட்டும் கிட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் புதிய பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் இதன்போது தலைவர்கள் கலந்துரையாடியதோடு, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கை, பொருளாதார ரீதியில் முன்னோக்கிப் பயணிப்பதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். மேலும், இலங்கை 2024இல் புதிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

மேலும், இலங்கை - உகண்டாவிற்கு இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது தீர்க்கமாக பேசப்பட்டது.

## யுவதி மீது தாக்குதல்: இரு சகோதரிகள் கைது

இந்நிலையில், குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றின் கழிவு நீர் வீதி வாய்க்கால் ஊடாக இன்னுமொரு வீட்டை அண்மித்து சென்றுள்ளது. கழிவு நீரை வீதிக்கு விட்ட வீட்டாருடன் அயல் வீட்டில் வசிக்கும் யுவதி ஒருவர் முரண்பட்டுள்ளார். இதன்போது இரு வீட்டாருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அது கைகலப்பாக மாறவே, குறித்த யுவதி மீது இரு பெண்கள் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் காயமடைந்த 22 வயதான யுவதி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையத் தாக்குதல் மேற்கொண்டதாக 30 மற்றும் 25 வயதுடைய சகோதரிகளான இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வவுனியாவில் அரச திணைக்களம் ஒன்றில் உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 'விஸ்வ புத்தர்' மீண்டும் கைது

கலகெடிஹேன பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் முதலில் டிசெம்பர் 12ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் அவருக்கு கொழும்பு பிரதான நீதவான், ஜனவரி 8ஆம் திகதி பிணை வழங்கியிருந்தார். விடுதலையின் பின்னர், அவர் பல நிகழ்நிலை (ஒன்லைன்) பேச்சு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார்.

இதேவேளை, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன் அவர் அடுத்த வாரம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் சமரவிக்கிரம நடத்திய நிகழ்ச்சி ஒன்றின் பொருட்டே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

## "100,000 பேர் பதியவில்லை"

2023 வாக்காளர் பட்டியல் தயாரிப்பின்போது, இது தெரியவந்துள்ளது. அதன்படி, 2023ம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் இளம் வாக்காளர்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படும் என்றார்.

## "உத்தேச நிகழ்நிலை காப்பு...

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு உள்ளிட்ட 58 அமைப்புகள், உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை மீளப்பெறுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன், சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரினதும் ஆலோசனைக்கு அமைய, அதனைத் தயாரிக்க வேண்டுமென ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம், குற்றங்கள் தொடர்பிலான எதனையும் விட விரிவான அர்த்தப்படுத்தல், சுயாதீன மேற்பார்வை இன்மை, நிறைவேற்றதிகாரத்தின் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் அபாயம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதாக அக்குழு தெரிவித்துள்ளது.

பொய்யான கருத்துகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் காணப்படும் தெளிவற்ற அர்த்தப்படுத்தலின் ஊடாக தணிக்கை அமுல்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு குறிப்பிட்டுள்ளது.







# ஹட்டனில் தேசிய பொங்கல் விழா

இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய பொங்கல் விழா, காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் ஹட்டன் - டன்பார் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்றுள்ளது.
















21/4 தாக்குதலில் உயிரிழந்தவர்கள்

# “புனிதர்களாக அறிவிக்கப்படுவர்”

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் இறந்தவர்களைப் புனிதர்களாகக் கத்தோலிக்க திருச்சபை அறிவிக்க உள்ளதாகக் கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கந்தானை புனித செபஸ்டியன் தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையின்போது பேசிய கர்தினால் ரஞ்சித், இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை நாடு கொண்டாடும் போது இதற்கான முதல் படி எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “2019ஏப்ரல் 21, அன்று தேவாலயங்களில் இறந்தவர்கள் தாங்கள் நம்பியதற்காக தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர். அன்று அவர்கள் கிறிஸ்துவை நம்பியதால் தேவாலயத்திற்கு வந்தனர். மற்ற புனிதர்களைப் போல கிறிஸ்துவை நேசித்ததால் அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர்.

ஒருவர் தியாகம் செய்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரே அவரை புனிதர் என்று பெயரிட முடியும். எனவே, ஈஸ்டர் ஞாயிறு பாதிக்கப்பட்டவர்களை இந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி புனிதர்களாக அறிவிப்பதை முன்னோக்கி நகர்வோம்.

கிறிஸ்தவம் என்பது தேவாலயங்களில் மத வழிபாடுகளில் ஈடுபடுவது மட்டுமல்ல. நாம் நீதிக்காக நிற்க வேண்டும். மற்றவர்களின் நீதிக்காக நாம் பேச வேண்டும். இதைத்தான் திருத்தந்தை பிரான்சிஸ் திருச்சபை எவ்வாறு செயல்பட வேண்டும் என்று தனது திருமறையில் நமக்குக் கற்பித்துள்ளார்" என்றும் கூறியுள்ளார்.



# வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



எம்.எப்.றிபாஸ்

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் சனிக்கிழமை(20) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

“மெஸ் லங்கா" நிறுவனத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்காகத் தள்ளு வண்டில்கள் மற்றும் அதற்குத் தேவையான ஆரம்பக் கட்ட வியாபாரத்துக்குரிய பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிச் பிரதேச செயலாளர் ராஷீத் யெஹியா, பிரதித்திட்டப்பணிப்பாளர் ஏ.எம்.தமீம், சிரேஷ்ட திட்டமிடல் உத்தியோகத்தர் யூ.எல்.எம். ஆகிர், நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஹசன் சியாத் உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# கந்தளாயில் இரத்ததான முகாம்

எப்.முபாரக்



கந்தளாயில் ‘உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்’ எனும் தொனிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் சனிக்கிழமை (20) இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் புதிய மதுரசா நகர் சமுக சேவை ஒன்றியம் மற்றும் அல்புருனி விளையாட்டு கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, கந்தளாய் அல் தாரிக் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த இரத்ததான முகாமில் கந்தளாய் அல்தாரிக் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள், பொதுமக்கள், இளைஞர், யுவதிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோகியோர் கலந்து கொண்டதோடு, இதன்போது நூற்றுக்கும் மேற்பட்டோர் இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# எரிந்து சாம்பலான மோட்டார் சைக்கிள்

மெய்யன்

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக எரிந்து சாம்பலான சம்பவம் ஒன்று பன்விலை பொலிஸ் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை (21) அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

பன்விலை - புரன்கும்புர கிராமத்தில் இரவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் அதிகாலை வேளையில் பற்றி எரிந்து அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசுக் காருக்கும் தீ பரவி சிறிது சேதமடைந்துள்ளது.

அவ்விடத்திலிருந்து காரை அப்புறப்படுத்திய வீட்டார், தீ பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் பன்விலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் திட்டமிடப்பட்ட சம்பவமா? அல்லது விபத்தா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


# இயற்கை வேளாண்மை பயிலரங்கு



நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி -கோணாவில் காந்தி கிராமத்தில் இயற்கை வேளாண்மை பயிலரங்கம் சனிக்கிழமை (20) நடைபெற்றுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் காந்தி நிலையமும் இணைந்து நடத்திய இப்பயிலரங்கில், தமிழ் நாட்டின் இயற்கை வேளாண்மை வல்லுநர் பாமயன், இயற்கை வேளாண்மை பண்ணை ஆலோசகர் ராஜகணேஷ் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த பயிலரங்கினை நடத்தியுள்ளனர். இந்நிகழ்வில், இப்பகுதி விவசாயிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மாகாண ஆளுநருக்கு கவிஞர் வைரமுத்து வாழ்த்து

எப்.முபாரக்

“கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அன்று மகாகவி பாரதியார் சொன்னதை இன்று நடைமுறைப்படுத்தி வருகிறார்” என கவிஞர் வைரமுத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ் பாரம்பரியத்தை மீட்டெடுத்த ஆளுநர் செந்தில் தொண்டமானை அகமகிழ்ந்து பாட்டெடுத்து வாழ்த்துவதாக கவிஞர் வைரமுத்து தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# சிவப்பு கோவாவின் விலை அதிகரிப்பு

ஆ.ரமேஸ்.

நுவரெலியாவில் பயிரிடப்படும் மரக்கறிகளில், புரோக்கோலி, சிவப்பு கோவா, பெஸில் இலை ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், புரோக்கோலி கிலோ கிராம் ஒன்றின் மொத்த கொள்வனவு விலை 4,000 ரூபாய் முதல் 4,100 ரூபாவாகும். அதேபோல, சிவப்பு கோவாவின் மொத்த கொள்வனவு விலை 3,500 ரூபாய் தொடக்கம் 3,700 ரூபாயாகும். அத்துடன், பெஸில் இலையின் கொள்வனவு விலை 3,000 ரூபாய் தொடக்கம் 3,100 ரூபாயாகும்.

கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய பொது சந்தையில் ஞாயிற்றுக்கிழமை (21) கொள்வனவு செய்யப்படும் மரக்கறி விலை பட்டியலை பொருளாதார மத்திய நிலைய காரியாலயம் அறிவித்துள்ளது. அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளிக்கிழமை 19ஆம் திகதி வரை 1,700 ரூபாய் தொடக்கம் 2,200 ரூபாய் வரை அதிகமாக உச்ச விலையை கொண்டிருந்த ஒரு கிலோ கிராம் கரட்டின் விலை வீழ்ச்சியடைந்து கிலோ கிராம் ஒன்றின் விலை கொள்வனவு விலை 900 ரூபாய் தொடக்கம் 950 ரூபாயாக குறைந்துள்ளது.

# விசேட நடமாடும் சேவை

எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு-வெல்லாவெளி பிரதேச செயலக பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான அஸ்வெசும கொடுப்பனவுக்கு தேசிய அடையாள அட்டை அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கான விசேட நடமாடும் சேவை திருப்பழுகாமம் கலாசார நிலையத்தில் வெள்ளிக்கிழமை (19) பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வன்னிநகர், மாவேற்குடா, வீரஞ்சேனை, பழுகாமம்-01, பழுகாமம்-02 மற்றும் விபுலானந்தபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட அஸ்வெசுமக்கு தகுதியுள்ள இதுவரை அடையாள அட்டை இல்லாத பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், குறித்த பிரிவுகளுக்குரிய கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர் உள்ளிட்ட தேசிய அடையாள அட்டைப் பிரிவு, பதிவாளர் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

# விரும்பிய உணவு உண்ணும் உரிமையும் பறிப்பு

வளமான மண்ணைக் கொண்ட விவசாய நாடு என்று அழைக்கப்படும் நம் நாட்டில் காய்கறிகளின் விலையேற்றம் உச்சம் தொட்டுள்ளது. இந்த விலையேற்றம், எதிர்வரும் ஏப்ரல் வரையிலும் இருக்குமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“தங்கம்” ஏன் கரட்டில் அளக்கப்படுகிறது என்பதை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கெரட் விலை உயர்ந்துள்ளது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் ஒரு கிலோ கிராம் கேரட் 2,100 ரூபாவாக இருந்தது. கேரட் ஒரு அத்தியாவசிய உணவு அல்ல என்று ஒருவர் வாதிடலாம். ஆனால், நாட்டின் சாமானிய மக்களுக்கு அவர்கள் விரும்பிய உணவை உண்ணும் உரிமை இருக்க வேண்டும்.

அது உங்களுக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றுவதற்கான, விரும்பிய மொழியைப் பேசுவதற்கான, உங்கள் விருப்பப்படி அரசியல் கருத்தை வைத்திருக்கும் உரிமைகளாகும் மற்றும் மீற முடியாத அடிப்படை மனித உரிமை. ஆனால், இன்று மக்களிடம் இருந்து அவர்கள் விரும்பிய உணவு உண்ணும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த உரிமை அரசியலமைப்பில் சேர்க்கப்படவில்லை, இது நாட்டின் அடிப்படை சட்டத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளது.

இந்நாட்டு மக்கள் தீராத துன்புறுத்தலுக்கு நான்கைந்து வருடங்களாக ஆளாகியுள்ளனர். பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் உக்கிரமடைந்து கொண்டே போகிறதே தவிரத் தீர்ந்து போவதாகத் தெரியவில்லை. பெரும்பான்மையான மக்களின் வருமானம் அப்படியே உள்ளது. சிலர் வருமானத்தை இழந்துள்ளனர். ஆனால், செலவு ஏழு முதல் எட்டு மடங்கு அதிகரித்துள்ளது.

விண்ணைத் தொடும் மரக்கறிகளின் விலைகள் காரணமாக நாடளாவிய ரீதியில் பொருளாதார நிலையங்கள் வெறிச்சோடியிருந்தது. வாடிக்கையாளர்கள் இல்லாததே இதற்குக் காரணம். மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கான வர்த்தகர்களின் வருகை 75 வீதத்தால் குறைந்திருக்கிறது.

பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்கள் காய்கறிகளை இந்த விலைக்கு வாங்க முடியுமா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களும், காலணிகளில் வசிப்பவர்களும் காய்கறிகளைப் பயிரிடுவது சிரமமாக உள்ளது.

மேலும், விடுதிகளில் சமைத்துச் சமைப்பவர்களும் அதிகம். காலத்துக்குக் காலம் புதுப்பித்துக் கொண்டிருக்கும் இவர்களின் பசியை எப்படித் தணிப்பது என்பது “சாப்பிடுவோரும் நக்கவோ” கூட யோசிக்க வேண்டிய கேள்வியாகும்.

எனினும், கொரோனா பரவல் காலத்திலும், பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் வீட்டுத்தோட்டங்களில் அதிகளவானோர் பெரும் அக்கறை காண்பித்திருந்தனர். தற்போதைய சூழ்நிலையில், தண்ணீர் கட்டணம் அதிகரிப்பால், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கே ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றனர். இதனால், வீட்டுத்தோட்டத்தின் மீதான அக்கறை அடியோடு மறக்கப்பட்டுவிட்டது.

மோசமான வானிலை காரணமாகவும் காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது.

மோசடி வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்களின் கடத்தலுக்கும் வழிவகுத்தது. எக்காரணம் கொண்டும், அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.








## வாழ்வியல் தரிசனம்

துறவுநிலை என்பது மாந்தர்களையோ எந்த உயிரினங்களையோ விலக்கி வைத்து வாழ்வதில்லை. துறவிகள் எவரையும் வெறுக்க மாட்டார்கள்.

அவர்கள் களங்கமற்ற அன்பு நிலையில்த்தான் இருப்பார்கள். ஆசையுள்ளவன் கண்டதையும் பார்த்து அடையவிரும்புவான். ஆனால், அன்புடையவர்கள், தியாகம் செய்யத் தயங்கமாட்டார்கள். அத்துடன், தாங்கள் செய்யும் காரியங்களில் பெருமைப்படுவதோ, அதை விளம்பரப்படுத்துவதோ மாட்டார்கள்.

ஆனால், இன்று சிலர் தங்களைத் தாங்களே துறவிகள் எனக் காட்டிக்கொண்டு, வெட்கமே இல்லாமல் இராஜபோக வாழ்க்கை வாழ்ந்து, சிற்றின்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இறைஞானம் உள்ளவர்கள், எளிய வாழ்க்கையைத்தான் வாழ்வார்கள். காசு, பணம், சொத்து சேர்க்கமாட்டார்கள், கிடைக்கும் உணவை உண்பார்கள், கிடைக்காது விட்டால் கவலைப்படமாட்டார்கள். அன்பான துறவிகள் பற்றுக்கு அப்பாற்பட்டவர்கள்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான எதிர்ப்பு

லக்ஸ்மன்

தொழில்நுட்ப இடைவெளி, டிஜிட்டல் மற்றும் பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் ஆயுதங்கள் வாயிலாக, அணிசேரா அமைப்பில் அங்கம் வகிக்கும் உலகின் அபிவிருத்தி அடைந்துவரும், அபிவிருத்தி அடைந்த நாடுகள் மத்தியில் பெரும் சமநிலை அற்ற தன்மை உருவாகியுள்ளது என்று உகண்டாவின் கம்பரா நகரில் நடைபெற்ற 19ஆவது அணிசேரா நாடுகளின் அரச தலைவர்களது மகாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

டிஜிட்டல் சார்ந்த விடயங்கள் குறித்து வெளிநாடுகளில் அவர் பேசுவது இது முதல் தடவையல்ல. இருந்தாலும் இலங்கையில் அறிமுகப்படுத்துகின்ற நிகழ்நிலை காப்புச் சட்டம் நல்லது என்று ஒரு தரப்பினரும் நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரத்தினை முற்று முழுதாகப் பாதிக்கும் என்பதால் அது கூடாது என்றும் கருத்துக்களும் எதிர்ப்புக்களும் வந்த வண்ணமிருக்கின்றன. ஆனாலும், அச்சட்டம் வந்தே தீரும் என்பது நாட்டிலுள்ள நிலைப்பாடு.

அரசாங்கத்திற்கும், நாட்டுக்கும் எதிராகத் தவறான கருத்துக்களை வெளியிடுவதைத் தடுத்தலை நோக்காகக் கொண்டது என்று பொதுப்படையாக நிகழ்நிலைக் காப்புச் சட்டத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டாலும், காரணங்களைத் தேடியறியும் செயற்பாட்டை மாத்திரம் செய்யும் சட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்களின் செயற்பாடே இங்குப் பிரச்சினைகளைக் கொண்டுவரும் என்பது பெரும் அச்சமாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் சட்டங்களை விளங்கிக்கொள்ளும் அளவுகள் அதில் தாக்கம் செலுத்தும். இந்த இடத்தில்தான், முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்ட முன்வரைவை எதிர்த்து மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை சிவில் சமூகத்தினரால் வேண்டுகோளாக வருகின்றது. அத்துடன், போராட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

அவர்களுடைய வேண்டுகோள், இலங்கை அரசானது இரவோடு இரவாக சட்டமூலங்களை உருவாக்கி பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு சட்டமாக்குவதும் அதன் பின்னர் நாட்டில் வாழும் மக்களின் உரிமைகளையும், இந்நாட்டினுடைய ஜனநாயக விழுமியங்களையும் அடியோடு வேரறுக்கின்ற செயல்பாடுகள் காலங்காலமாக அரங்கேறிக்கொண்டே வருகின்றன. குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கூறலாம். அதேபோன்று இவ்வாறான சட்டங்கள் இந்நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகங்களைக் குறிவைப்பதோடு, அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை இல்லாது செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றமை யாவரும் அறிந்த யதார்த்தமாகும்.

குறிப்பாக சிறுபான்மைச் சமூகமாக நாம் கருத்தில்கொள்வது யாதெனில், எதிர்காலங்களில் சுதந்திரமாகத் தகவல்களை அணுகுவதற்கும். கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் பாரியதொரு அச்சுறுத்தலாக இச்சட்டம் செயல்படும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆகையால், இச்சட்டம் தொடர்பில் பாராளுமன்ற விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட வரைபைத் தாங்கள் எதிர்ப்பதோடு, சிறுபான்மைச் சமூகத்தினுடைய பார்வையினையும் முன்வைக்க வேண்டும், இச்சட்ட மூலத்திற்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என்று அமைந்திருக்கிறது.

சிவில் சமூகங்களுடைய கோரிக்கையும், வேண்டுகோளும் இவ்வாறாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு எதிர்த்து வாக்களிப்பதும் சிறுபான்மை மக்களது மனோநிலையையும் வெளிப்படுத்துவதும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கடைமையாகும். இருந்தபோதிலும், எத்தனை மக்கள் பிரதிநிதிகள் இந்நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தினை எதிர்ப்பார்கள் என்பதனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

அத்துடன், சமூக ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற கருத்துக்களால் பாதிக்கப்படுகின்றவர்கள் தங்களுக்கு இவ்வாறானதொரு சட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது நல்லதே என்பது ஒரு நிலைப்பாடாகவே இருந்து வருகிறது.

சமூக ஊடகங்கள் மீதான தணிக்கை ஒருவருடைய விமர்சனம் செய்யும் உரிமையை மறுக்கிறது. அதில் பாதிப்பு ஏற்படுத்துவது சரியல்ல, விமர்சனங்களால் எனக்குப் பிரச்சினையில்லை என்பது போன்ற கருத்தினை சிறிலங்கா பொதுஜன பெருமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தார். இருந்தாலும் அவர் இச்சட்டத்துக்கு எதிராக வாக்களிப்பார் என்ற கருத்தில் இதனை நாம் பார்க்கமுடியாது. ஆனால், அவருடைய கட்சியின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவே கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

நாட்டில் மாத்திரமல்ல, உலகளவிலும் வெறுப்புப் பேச்சு தவிர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு தலையெடுத்து வருகிறது. அது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும், விளக்கமளிப்புகளும் நடந்து வருகின்றன. வரம்புகளை மீறிய கருத்துக்களை, சொற்பிரயோகங்களைப் பயன்படுத்துவது தவிர, பிறருடைய தனிப்பட்ட விடயங்களை மோசமாக விமர்சிக்கின்ற விடயங்கள் கூட இந்த வெறுப்புப் பேச்சாகப் பார்க்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில், சமூக ஊடகங்கள் மற்றும் செயலிகள் மூலமாகப் பகிரப்படும் தேவையற்ற விடயங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு என்பது முக்கியமாகும்.

இன்றைய காலத்திலும் ஊடகங்கள் என்பவை அறிவார்ந்த சமூகங்களை உருவாக்குவதில் பிரதானமானவையாகக் காணப்படுகின்றன. ஆனால், புரட்சிகளுக்கொப்பான மக்கள் போராட்டங்களையும் இவற்றின் வெளியீடுகள் ஏற்படுத்தி விடுகின்றன. இருந்தாலும் அதிகார வர்க்கங்கள் இவ்வாறான விடயங்களை ஏற்றுக் கொள்வதில்லை. அதனை அதிகாரங்கள், சட்டங்களைக் கொண்டு அடக்குவது உலகின் அனைத்து நாடுகளிலும் கட்டமைக்கப்பட்ட வகையில் செயற்படுகின்றன. அது போன்றதொரு இறுக்கமான கட்டுப்பாடாக சமூக ஊடகங்கள் மீதானதான இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டம் அமைந்திருக்கிறது. இச் சட்டமானது பிரதான ஊடகங்களின் இணையங்கள் மற்றும் சமூக ஊடகங்களையும் கட்டுப்படுத்த வாய்ப்பிருக்கிறது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட கருத்துக்களே காலி முகத்திடலில் நடைபெற்ற “கோட்டா கோ கம” என்ற அரகலய போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. அதுவே இலங்கை அரசாங்கத்தில் ஜனாதிபதி என்கிற தலைமையை மாற்றியமைத்திருந்தது. நிகழ்ந்த தன்னெழுச்சிப் போராட்டமே அது. அதன் பின்னர் நடைபெற்ற அடக்குமுறை நடவடிக்கைகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், ஐ.சி.சி.பி.ஆர். சட்டமும் கையில் எடுக்கப்பட்டது. ஆனால், இப்போது கொண்டுவரப்படுகின்ற நிகழ்நிலைக்காப்புச் சட்டம் இனிமேல் இவ்வாறான ஒன்று நிகழாமலிருப்பதனை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகிறது என்பதே வெளிப்படையான யதார்த்தமாகும்.

இலங்கையிலுள்ள ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை பத்திரிகைப் பேரவை உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனை இலங்கையிலுள்ள அனைத்து ஊடக நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அதனால் சரியான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலையே இன்றும் காணப்படுகிறது. ஆனால், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்திற்கு அவ்வாறான நிலை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் குறைவு என்பதே உண்மை.

டியூனிசியாவில் உருப்பெற்ற “அரபு வசந்தம்” இந்த சமூக ஊடகங்களினால் நடைபெற்றதாகவே ஆரம்பத்தில் அறியப்பட்டது. அதே போன்றதொரு மக்கள் எழுச்சியாக இலங்கையில் அரகலய சொல்லப்படுகிறது. இருந்தாலும் மக்கள் எதிர்பார்க்கின்ற நல்லவைகள் நடைபெறுவதை அரசாங்கங்கள், ஆதிக்கவாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனால், அடிப்படைவாத உணர்வுகள், பகை உணர்வுகள் சாதி, சமூக, பிரதேச உணர்வுகள், இனவாத, மதவாத, குறுந் தேசியவாத உணர்வுகளைப் பரப்புகின்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படுவது நாட்டுக்கு நல்லதே என்ற சிந்தனையுள்ள அரசாங்கத்திடம் நாம் கோருகின்ற விடயங்கள் நடைபெறுமா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

வெறுனே கருத்துச் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது. மக்களை அடக்குவதற்கும், அவர்களை அடிமைகளாக நடத்துவதற்கும் அரசாங்கம் வழியைக் கண்டுபிடித்திருக்கிறது என்று விவாதிப்பதில் பயனேதும் விளையா? இருந்தாலும், தேர்தல் காலங்களில் நடைபெறுகின்ற இனத்துவேச செயற்பாடுகள், பரப்புதல்கள், போன்ற விடயங்களுக்கும் இச்சட்டம் ஆபத்தாகவே இருக்கப் போகிறது என்பது மாத்திரமே உண்மை.

## கடிதங்கள்

### நோயாளியை தூக்கிச்சென்ற அவலம்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நோயாளியைக் கொண்டு செல்வதற்குச் சக்கர கதிரை வழங்கப்படாமையால் அவரின் உறவினர்கள் நோயாளியைத் தூக்கிக்கொண்டுச் சென்ற சம்பவம் வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை வைத்தியசாலையில் எலும்பு முறிவுக்கு உள்ளாகி சிகிச்சை பெறுவதற்காகச் சென்ற நோயாளியைக் கொண்டு செல்வதற்குச் சக்கர கதிரை வழங்கப்படவில்லை எனவும் இதனால் நோயாளியைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் நோயாளிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிய வருகின்றது. அத்துடன், நோயாளிகளுக்கான கட்டில்கள் பற்றாக்குறையின் காரணமாகத் தரையில் காட்போட் அட்டைகளை விரித்துப்படுக்க வேண்டியிருப்பதாகவும் நோயாளிகள் கவலை வெளியிடுகின்றனர்.

திருகோணமலை வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர்கள், மருந்து மற்றும் வைத்தியசாலை உபகரணங்களின் பற்றாக்குறையின் காரணமாகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாகவும் சிறந்த சேவையினை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் நோயாளிகள் விசனம் வெளியிடுகின்றனர்.

சஞ்சீவன் துரைநாயகம்



ஜப்பானில் பணியாற்றுவதற்கான

# திறன் காண் பரீட்சை மார்ச் 10 இல்



ஜப்பானிய விமான நிலைய கள கையாளல் திறன் காண் பரீட்சை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் (பட்டப்படிப்பு பீடத்தில் (பட்டப்படிப்பு பீடம், 35/30 பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 7) நடைபெறும் என இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது. ஜப்பானில் திறன் படைத்த பணியாளர்களாக பணியாற்றுவதற்கு இந்த திறன் காண் பரீட்சை வழிகோலுவதாக அமைந்திருக்கும்.

இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை பெப்ரவரி 9ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வது, கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையை பூர்த்தி செய்ததும் நிறைவு செய்யப்படும்.

ஜப்பானில் பணியாற்றுவதற்கு இந்த புதிய வாய்ப்பின் பலனை திறன் படைத்த பல இலங்கையர்கள் பெற்றுக் கொள்வார்கள் என ஜப்பானிய தூதரகம் எதிர்பார்ப்பதுடன், ஜப்பானின் ஆகாய விமானத் துறைக்கு பங்களிப்பு வழங்குவதற்கு மாத்திரமன்றி, இலங்கையின் எதிர்கால விருத்திக்கு பங்களிப்பு வழங்கக்கூடிய வகையில் தமது திறன்களை கட்டியெழுப்பிக் கொள்ள முடியும். இலங்கையுடன் நீண்ட காலமாக பேணி வரும் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமான ஆதரவை ஜப்பானிய தூதரகம் வழங்கும்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன்

# கொமர்ஷல் வங்கி ஒப்பந்தம் கைச்சாத்து



கொமர்ஷல் வங்கி இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன் ஒரு புதிய கூட்டு ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் செயற்பாடுகளில் ஒன்றாக வங்கி இதனை செய்துள்ளது. சிறந்த ஊழியர் விதிமுறைகளை உறுதிசெய்வதில் வங்கியின் உறுதியான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனைகள் மற்றும் வங்கி, தொழிற் சங்கம் மற்றும் ஊழியர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் மூலம் திறமையான தொழில் சூழலைப் பேணுதலை கருத்திற்கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கூட்டு ஒப்பந்தமானது, கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மற்றும் வங்கியின் நிரந்தர வேலை ஒப்பந்தங்களில் பணிபுரியும் தொழிற் சங்க உறுப்பினர்கள், நிறைவேற்று உதவியாளர்கள் மற்றும் அதனுடன் இணைந்த தரப்பினர் மற்றும் நிறைவேற்று தரம் அற்ற ஊழியர்கள் ஆகியயோரை உள்ளடக்கியதாக இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினருக்கும் இடையே கையெழுத்தானது.

இவ்வாறு கையெழுத்திடப்பட்ட இந்த கூட்டு ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தமானது 2026ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை அமுலில் இருக்கும்.

SLT–MOBITEL ‘My Super Offers’

# வெகுமதித் திட்டம் அறிமுகம்




நுகர்வோர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கு SLT-MOBITEL இனால், ‘My Super Offers’ எனும் புதிய வெகுமதித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு மொபைல் வாடிக்கையாளர்களின் பிரத்தியேகமான தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், இந்த வெகுமதித் திட்டம் அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பாவனை, வலையமைப்பில் இணைந்துள்ள காலம் மற்றும் தெரிவுகள் போன்றவற்றுக்கமைய அனுகூலமளிக்கும் வகையில் My Super Offers அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர் அனுபவம் பிரத்தியேகமானதாகவும், வெகுமதியளிப்பதாகவும் அமைந்திருப்பதை உறுதி செய்கின்றது.

My Super Offers இனூடாக, SLT-MOBITEL மொபைல் பாவனையாளர்களுக்கு தற்போது தமது நுகர்வுக்கமைய மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய டேட்டா போனஸ்கள், இலவச குரல் நிமிடங்கள் மற்றும் இதர பிரத்தியேக ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் வெகுமதிகள் போன்ற பெறுமதிகள் மற்றும் அனுகூலங்களை அனுபவிக்க முடியும். Selfcare App இல் இந்த சலுகைகளை பார்வையிடலாம்.

My Super Offers இனூடாக, ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் காணப்படும் பிரத்தியேகமான பல்வேறு சிறப்பு வெகுமதிகள் பற்றி காண்பிக்கப்படும். ரூ.100 ரீலோட் செய்கையில் இரட்டிப்பு போனஸ்கள், ரூ.988 ரீலோட் செய்கையில் 20 GB மேலதிக டேட்டா, ரூ.200 ரீலோட் செய்கையில் 50 நிமிடங்கள் எந்த வலையமைப்புக்குமான அழைப்புகள் அல்லது பக்கேஜை இரட்டிப்பாக்கிக் கொள்வது என அனைவருக்கும் அனுகூலம் கிடைப்பதை SLT-MOBITEL உறுதி செய்துள்ளது.

மேலும், ரீலோட் செய்வதற்கு விற்பனை நிலையங்களுக்கு விஜயம் செய்யும் போது, வாடிக்கையாளர்களுக்கு காணப்படும் சலுகைகள் பற்றி விற்பனையாளர்களுக்கு பார்வையிட முடியும். ‘My Super Offers’ ஐ பயன்படுத்தி வாடிக்கையாளரின் மொபைல் இலக்கத்தை பதிவிடுவதனூடாக, காணப்படும் பிரத்தியேகமான சலுகைகள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு காண்பிக்கும் வசதி விற்பனையாளர்களுக்கு காணப்படுவதுடன், விசேட சலுகைகளை பெற்றுக் கொள்வதற்காக உயர் பெறுமதியான ரீலோட்களை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

My Super Offers உடன் SLT-MOBITEL இனால் வாடிக்கையாளர் அனுபவம் மேம்படுத்தப்படுவது மாத்திரமன்றி, விற்பனையாளர்களுக்கு ரிவோர்ட்ஸ் திட்டத்துடன் மேலும் ஈடுபாட்டை பேணுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

SLT-MOBITEL இன் My Super Offers இனூடாக, வாடிக்கையாளர் அனுபவத்தில் மற்றுமொரு தொழிற்துறை நியமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாவனை முறைமைகளுடன் hi-tech real-time பகுப்பாய்வு ஆற்றல்களினூடாக, SLT-MOBITEL இனால் டிஜிட்டல் யுகத்தில் வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பை ஏற்படுத்தக்கூடிய டிஜிட்டல் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையர்களின் வாழ்க்கைக்கு வலுவூட்டுவது எனும் வர்த்தக நாமத்தின் உறுதி மொழிக்கமைய, டிஜிட்டல் இணைப்புத் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியான புத்தாக்கங்களை பெற்றுக் கொடுப்பதில் SLT-MOBITEL தொடர்ந்தும் தன்னை ஈடுபடுத்தி வருவதுடன், பரந்தளவு நுகர்வோர் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் கவனம் செலுத்துகின்றது. வாடிக்கையாளர்களுக்கு புதிய வழிகளில் வெகுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் அடுத்த கட்ட பாரிய நடவடிக்கையாக My Super Offers அமைந்துள்ளது.





# ‘வரங்கலெல்லாம் தவங்களாவதில்லை’

க.வசந்தகுமாரி எழுதிய ‘வரங்கலெல்லாம் தவங்களாவதில்லை’ என்ற கவிதை நூல் வெளியீட்டுவிழா கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில், சனிக்கிழமை (20) வெகு விமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஊடகவியலாளர் கஜமுகன் தலைமை தாங்கியதோடு பிரதம அதிதியாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கலந்துகொண்டதோடு நூலின் முதல் பிரதியை இலங்கை பொன்மனச்செம்மல் தாஜ்மஹான் பெற்றுகொண்டார்.

– முனீரா அபூபக்கர்



# மண்முனைப்பற்றில் பொங்கல் விழா...

உழவர் திருநாளாம் தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தினேஷ் தலைமையில் மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மண்முனை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வளாகத்தில் வயல் அறுவடை பாரம்பரிய நிகழ்வுகளுடன் வெள்ளிக்கிழமை(19) சிறப்பாக நடைபெற்றது.

– வ.சக்திவேல்

# திருகோணமலையில் தைப்பொங்கல் விழா...

அகரம் மக்கள் கலைக்கூடத்தின் தைப்பொங்கல் விழா திருகோணமலை இந்து கலாசார மண்டப முன்றலில் சனிக்கிழமை (20) காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில், வரவேற்பு நடனம், பரிவட்டம், வயலின், புல்லாங்குழல், சிலம்பம் உட்பட பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

- அ.அச்சுதன்





# கடவுள்தான் அனுப்பினாரா?

அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் ராணி சீதரனின் “கடவுள்தான் அனுப்பினாரா" சிறுகதை நூல் அறிமுக விழா திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் எண்ணம் போல் வாழ்க்கை அமைப்பின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் சனிக்கிழமை (20) மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த மூத்த எழுத்தாளரும் ஊடகவியலாளருமான திருமலை நவத்திற்கு நூலின் முதல் பிரதி வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.




– அ.அச்சுதன்



# அயோத்தி ராமர் கோவில்

உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியில் பிரமாண்ட ராமர் கோவில் கட்ட கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது. கட்டுமான பணிகளைக் கவனிக்க ராமஜென்ம பூமி அறக்கட்டளை அமைக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5ஆம் திகதி அயோத்தியில் ராமர் கோவில் கட்ட பூமி பூஜை நடந்தது. பிரதமர் மோடி கலந்து கொண்டு பூமி பூஜை நடத்தி வைத்து, அடிக்கல் நாட்டினார். ராமர் கோவில் கும்பாபிஷேகம் 2024 ஜனவரி 22ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறுகிறது. அக்கோவின் சிறப்பு அம்சங்களில் சில...

## அழகிய சிற்பங்கள்




ராமர் கோவிலின் உட்புறம் செதுக்கப்பட்ட அழகிய சிற்பங்கள்

## நடிகர்களுக்கு அழைப்பு



தொலைக்காட்சி தொடரில் ராமர், சீதை வேடங்களில் நடித்துள்ள அருண் கோவில், தீபிகா சிக்லியா ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## சிறைகளிலும் நேரலை



அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழாவை உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் நேரலை செய்ய ஏற்பாடு செய்யப்படும் என அம்மாநில சிறைத்துறை அமைச்சர் தரம்வீர் பிரஜாபதி தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணி பெண்கள் கோரிக்கை



ராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதே நாளில் (22ஆம் திகதி) 15-க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்கள் உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைப் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

## அமெரிக்காவில் கார் பேரணி



அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் ஹியூஸ்டன் நகரில் இந்து மதத்தினர் சார்பில் ஞாயிற்றுக்கிழமை (14) கார் பேரணி நடத்தப்பட்டது.

216 கார்களில் இந்தியா, அமெரிக்கா மற்றும் காவிக்கொடிகளுடன் இந்து மதத்தினர் நூற்றுக்கணக்கானோர் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

## பிரமாண்டமான மணி



உத்தரப் பிரதேச மாநிலம் எட்டா மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 500 பக்தர்கள் இணைந்து, 2,400 கிலோ கிராம் நிறையைக் கொண்ட கோவில் மணியை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இந்த பிரம்மாண்ட மணியின் ஓசை சுமார் 10 கி.மீ. வரை கேட்கக்கூடியது என்று கூறப்படுகிறது.

இதோடு சேர்த்து தலா 51 கிலோ கிராம் நிறையைக் கொண்ட 7 மணிகளையும் அவர்கள் அயோத்தி ராமர் கோவிலுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

## பிரமாண்டமான மேளம்



குஜராத் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட 500 கிலோ கிராம் நிறையைக் கொண்ட மேளம், அலங்கரிப்பட்ட தேரில் அயோத்திக்கு கொண்டு வரப்பட்டது. இரும்பு மற்றும் செப்பு தகடுகளை பயன்படுத்தி செய்யப்பட்டுள்ள இந்த மேளம், தங்கம் மற்றும் வெள்ளி அடுக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதனை ராம ஜென்மபூமி அறக்கட்டளை நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 1,100 கிலோ கிராம் அகல் விளக்கு




குஜராத் மாநிலம் வதோதராவைச் சேர்ந்த அரவிந்த்பாய் பட்டேல் என்ற விவசாயி 1,100 கிலோ கிராம் நிறையைக் கொண்ட இராட்சத விளக்கை வடிவமைத்துள்ளார். மொத்தம் 9.25 அடி உயரமும், 8 அடி அகலமும் கொண்ட இந்த விளக்கு தங்கம், வெள்ளி, தாமிரம், துத்தநாகம் மற்றும் இரும்பு ஆகிய 5 உலோகங்களைக் கொண்டு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மொத்தம் 851 லிட்டர் நெய் கொள்ளளவு கொண்ட இந்த விளக்கு தற்போது அயோத்தி வந்தடைந்துள்ளது.

## 108 அடி நீள ஊதுவத்தி



குஜராத்தின் வதோதரா நகரில் தயாரிக்கப்பட்ட 108 அடி நீள ஊதுவத்தி அயோத்திக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 3,610 கிலோ கிராம் நிறையையும், மூன்றரை அடி சுற்றளவும் கொண்ட இந்த ஊதுவத்தியின் நறுமணம் அயோத்தியில் பரவத் தொடங்கியது. ஊதுவத்தியை ஏற்றியபோது பக்தர்கள் ஜெய் ஶ்ரீ ராம் என முழக்கம் எழுப்பினர். இந்த ஊதுவத்தியில் வாசனை சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் வரை வீசுவதுடன், இந்த ஊதுவத்தி முழுவதும் எரிவதற்கு சுமார் ஒன்றரை மாதம் ஆகும்.

## 1,265 கிலோ கிராம் லட்டு




தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்த நாகபூஷன் ரெட்டி என்ற நபர், அயோத்தி ராமர் கோவிலுக்கு வழங்குவதற்காக 1,265 கிலோ கிராம் நிறையைக் கொண்ட லட்டுவை தயாரித்துள்ளார். இந்த லட்டு குளிரூட்டப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டு அயோத்திக்கு கொண்டு செல்லப்படுகிறது.

## 11 கருவறையில் ராமர் சிலை

அயோத்தி கோவில் கருவறையில் நிறுவப்பட்டுள்ள ராமர் சிலையின் முதல் புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது. 51 அங்குல சிலையின் கண்கள் துணியால் மூடப்பட்டுள்ளது. இந்த ராமர் சிலையை மைசூரைச் சேர்ந்த பிரபல சிற்பி அருண் யோகிராஜ் செதுக்கியுள்ளார். கருங்கல்லில் வடிவமைக்கப்பட்ட ஐந்து வயதுக் குழந்தை ராமர், தாமரையின் மீது நிற்பது போன்று சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய பூட்டு



400 கிலோ கிராம் நிறையுடைய பூட்டு மற்றும் சாவி அலிகாரில் இருந்து அயோத்திக்கு வந்தடைந்தன. இந்த பூட்டு இந்து மகா சபா சார்பில் அயோத்தி ராமர் கோவிலுக்கு பரிசாக வழங்கப்பட்டது.

## 13 மொழி பட்டுப்புடவை



அயோத்தி சீதைக்கு ஆந்திராவில் நெசவுத் தொழிலாளர் மற்றும் வியாபாரி நாகராஜு என்பவர் ரூ.5 இலட்சம் செலவில் 13 மொழிகளில் இருபுறமும் ராமாயணம் புகைப்படங்களுடன் கூடிய பட்டுப்புடவையைக் காணிக்கையாக வழங்க உள்ளார்.

இது குறித்து நாகராஜூ கூறியதாவது, "வால்மீகி மகாபாரதம் எழுதத் தொடங்கியது, தசரதர் யாகம் மேற்கொண்டது, ஶ்ரீ ராமரின் அவதாரம், அதன் பின்னர் அவரது கல்வி, வில் பயிற்சி, சுயம்வரம், சீதாதேவி விவாஹம் பட்டாபிஷேகம் என ராமாயண படலம் முழுவதும் சுமார் 400 படங்கள் இந்த பட்டுப்புடவையின் இரு புறமும் நெய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த புடவை முழுவதும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, அஸ்ஸாமி, உருது என மொத்தம் 13 மொழிகளில் 'ஜெய் ஶ்ரீ ராம்' என நெய்யப்பட்டுள்ளது. மொத்தம் 16 கிலோ எடை கொண்ட புடவையின் நீளம் சுமார் 60 மீட்டராகும். ரூ.5 இலட்சம் செலவில் புடவையைத் தயாரிக்க சுமார் 7 மாதங்கள் வரை ஆனது. இந்த பட்டுச் சேலை அயோத்தி ராமர் கோயில் அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்படும்" என்றார்.

## அனுமன் ஆலயத்தில் ராமர் பஜனை


அயோத்தியில் திங்கட்கிழமை (22) திகதி நடைபெறும் ஶ்ரீ ராமர் கோவில் கும்பாபிஷேகம் தொடர்பாக கந்தப்பலை போட் சூட் மேல் ஶ்ரீ முத்து மாரி அம்மன் ஶ்ரீ ராமர் பஜனை குழுவினர் ரம்பொடை ஶ்ரீ பக்த ஹனுமான் ஆலயத்தில் டி.எம். மனோஜ் குருக்கள் தலைமையில் ராமர் பஜனை பாடி மகிழ்ந்தனர். சின்மயா மிஷன் காயத்ரி விக்ரமசிங்கவும் பங்கேற்றிருந்தார்.

## இகிமிஷனில் ராமநாம சங்கீர்த்தனம்

இந்தியா அயோத்தியில் திங்கட்கிழமை (22) இடம்பெறும் ராமர் ஆலய பிரதிஷ்டைக்காக மட்டக்களப்பு இராமகிருஷ்ண கிமிஷனில் "ராமநாம சங்கீர்த்தனம்" நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வை இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஶ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜின் வழிகாட்டலில், உதவி பொது முகாமையாளர் ஶ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மஹராஜ் இதனை ஏற்பாடு செய்துள்ளார். சிறப்பு "ராமநாம சங்கீர்த்தனம்" திங்கட்கிழமை (22) மாலை 6 மணி முதல் 7 மணி வரை நடைபெறவிருக்கிறது. பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# வரலாறு



பண்டைய காலத்தில் கோசல நாட்டின் தலைநகரமாக அயோத்தி இருந்தது. இந்த கோசல நாட்டின் முதல் மன்னர் இக்ஷ்வாகு. இவர்தான் சூரிய வம்சத்தை நிறுவியதாக புராணங்கள் சொல்கின்றன.

கோசல தேசம் என்பது தற்போதைய உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஒடிசா, சத்தீஸ்கர், மேற்கு வங்காளம், நேபாளம், பூட்டான் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். இந்த கோசல நாட்டின் மன்னராக இருந்த தசரதனின் மகன்தான் ராமர்.

ராமர் ஒரு மன்னர் மட்டுமல்லாமல், விஷ்ணு பகவானின் ஓர் அவதாரமும் ஆவார். இந்தியாவில் ராமரை ஏராளமானோர் வழிபடுகின்றனர். அயோத்தியில் ராமர் பிறந்ததாக நம்பப்படும் ராம ஜென்மபூமியில் கோவில் கட்ட வேண்டும் என நீண்டகாலமாகப் பக்தர்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.

ராமஜென்ம பூமி தொடர்பான வழக்கின் முடிவில், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, அங்கு மிகப் பிரமாண்டமாக ரூ.2 ஆயிரம் கோடி செலவில் ராமர் கோவில் கட்டது. இந்த கோவில் கட்டுமான பணிகளை ஶ்ரீ ராம் ஜென்ம பூமி தீர்த்த ஷேக்த்ரா என்ற அறக்கட்டளை செய்தது. இங்குக் கோவில் கட்டுவதற்குப் பிரதமர் மோடி 2020ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார்.

இந்த கோவில் தரைத்தளத்துடன் சேர்த்து 3 தளங்களாக கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் உள்ள கோவில் கருவறையில், ராமர் சிலை பிரதிஷ்டை செய்யும் வைபவம் 2024 ஜனவரி 22ஆம் நடக்கிறது.

கோவில் வரைபடம் தயாரித்த சோமபுரா சந்திராகாந்த் கூறியதாவது,

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் 2.77 ஏக்கர் இடம் கோவில் கட்ட கிடைத்தது. அந்த இடத்தை சுற்றியுள்ள இடங்கள் ஶ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த ஷேக்த்ரா அறக்கட்டளையால் வாங்கப்பட்டது. மொத்தம் 108 ஏக்கர் பரப்பளவில் அயோத்தி ராமர் கோவிலை நிறுவத் திட்டமிடப்பட்டது. ஆனால் இதுவரை சுமார் 67.3 ஏக்கர் நிலம் மட்டுமே வாங்கப்பட்டு உள்ளது. அதில் நீதிமன்றம் ஒதுக்கிய 2.7 ஏக்கர் நிலத்தில் ராமர் கோவிலும், அதனைச் சுற்றி 2.8 ஏக்கரில் பிற சன்னதிகளும் கட்டப்பட்டுள்ளன. மொத்தம் 70 ஏக்கர் நிலத்தில் 5.57 ஏக்கர் முழுவதும் கோவில் கட்டுமானங்கள் அமைகிறது. உலகிலேயே அங்கோர்வாட் கோவில் (406 ஏக்கர்), அமெரிக்கா அக்ஷர்தாம் கோவில் (186 ஏக்கர்), தமிழக ஶ்ரீரங்கம் கோவில் (156 ஏக்கர்), வேலூர் லட்சுமி நாராயணி தேவி கோவில் (100 ஏக்கர்) ஆகியவை நிலப்பரப்பில் பெரிய கோவில்கள் ஆகும். ஆனால், கோவில் கட்டுமான பரப்பளவு குறைவு. உலகத்திலேயே 5.7 ஏக்கர் நிலப்பரப்பு முழுவதும் கோவில் கட்டிடங்களாக அமைவது அயோத்தி ராமர் கோவிலில் தான். எனவே உலகிலேயே மிகப்பெரும் கோவிலாக இது இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கை மன்னன் இராவணனை, ராமர் வதம் செய்துவிட்டு தனது வனவாசத்தையும் முடித்து விட்டு மனைவி சீதையுடன் அயோத்திக்குத் திரும்பும்போது மக்கள் ஊர் முழுவதும் விளக்கேற்றிக் கொண்டாடினர். இந்த நாளைதான் தீபாவளியாக வட இந்தியாவில் கொண்டாடுவதாகப் புராணங்கள் சொல்கின்றன.

அதே போல் தற்போது அயோத்தி ராமர் கோவில் கருவறையில் குழந்தை ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்படும் நாளை இன்னொரு தீபாவளி என்று அயோத்தி மக்கள் கூறுகின்றனர்.

அயோத்தி ராமர் கோவில் குறித்து எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில், கோவில் வளாகத்தில் 2 ஆயிரம் அடியில் கீழ் காலப் பெட்டகம் (Time Capsule) வைக்கப்படுகிறது. இந்த பெட்டகத்திற்குள் ராமர் பற்றிய வரலாறு, கோவில் கட்டுமானம் போன்ற விரிவான தகவல்கள் செம்பு பட்டயத்தில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு இருக்கிறது.

# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORAதினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர றிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





### பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



### நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

### ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :..........................................
மாகாணம் :..................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர் :**.......................................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை :**.......................................................................................

**மாகாணம் :**.......................................................................................

**வீட்டு முகவரி :**.......................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர் :**.......................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் :**.......................................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் .......................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

..............................................
அதிபரின் கையொப்பம்

வடகொரியா

படம் பார்த்த சிறுவர்களுக்கு

# 12 வருடம் தண்டனை



தென் கொரியா பொப் இசை சினிமாவை கண்டு களித்த 16 வயதான இரண்டு சிறுவர்கள் தண்டிக்கப்பட்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியா மக்கள் தென்கொரியா மக்களுடன் எந்த வகையில் தொடர்பு ஏற்படுத்தினாலும் சொந்த நாட்டு மக்களுக்கே தண்டனை வழங்கும் கொடூரம் சமீப காலமாக நிலவி வருகிறது. அந்நாட்டு ஜனாதிபதியாக இருக்கும் கிம் ஜோங் உத்தரவில் தான் இது தொடர்வதாக கூறப்படுகிறது.

தென்கொரியா நாடகங்களை பார்க்கவும் வடகொரியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையை மீறி தென்கொரியாவில் பொப் இசை சினிமாவை பார்த்த 2 பாடசாலை சிறுவர்களுக்கு 12 ஆண்டுகள் கடும் வேலை செய்யும் தண்டனையை வடகொரியா அரசு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக வடகொரியாவில் இருந்து வெளியேறி டோக்கியோ பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையில் பேராசிரியராக இருக்கும் முனைவர் சோய் க்யோங் ஹுய் கூறுகையில், “இதுபோன்ற கடுமையான தண்டனையை அளித்ததன் மூலம் ஒட்டுமொத்த வடகொரிய மக்களுக்கும் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. தென்கொரிய கலாசாரம் வட கொரியாவில் ஊடுருவி வருவதை இது உறுதிப்படுத்துகிறது. அது கிம் ஜோங் உன் கட்டமைத்துள்ள வட கொரிய சிந்தனையை எதிர்ப்பதாக உள்ளது. அதனாலேயே அவர் இத்தகைய தண்டனைகளை அமுல்படுத்துகிறார்" என்று தெரிவித்துள்ளார்.

மாலைத்தீவு

## மாலைத்தீவு ஜனாதிபதி முடிவால் சிறுவன் மரணம்

மாலைத்தீவு ஜனாதிபதி முகமது முய்சு, இந்திய விமானத்தை பயன்படுத்த அனுமதி மறுத்ததால், உடல்நலம் பாதிக்கப்பட்ட சிறுவன் உயிரிழந்துள்ளார்.

மாலத்தீவின் கபி அலிப் விலிங்ஹில்ஸ் பகுதியில், மூளையில் கட்டியால் பாதிக்கப்பட்டு வந்த, 14 வயது சிறுவனுக்கு மேல் சிகிச்சைக்காக தலைநகர் மாலேயில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அப்போது இந்தியா வழங்கிய டிரோனியர் விமானத்தை பயன்படுத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்திய விமானத்தை பயன்படுத்த மாலைத்தீவு ஜனாதிபதி அனுமதி மறுத்துள்ளார். இதனால் உயிருக்கு போராடி கொண்டிருந்த 14 வயது சிறுவனுக்கு சரியான நேரத்தில் சிகிச்சை கிடைக்காமல் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்கா

## கல்விக் கடனை இரத்து செய்தார் ஜோ

அமெரிக்காவில் கல்விக்கடன் வாங்கிய பலர் அதனை திருப்பி செலுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். எனவே இந்த கல்விக்கடனை இரத்து செய்ய வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன்படி, மாணவர்களுக்கு வழங்கிய கல்விக்கடனை இரத்து செய்வதாக தனது தேர்தல் வாக்குறுதியில் ஜனாதிபதி ஜோ பைடன் கூறியிருந்தார்.

இந்தநிலையில், சுமார் 5 பில்லியன் டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ. 1,597,957,000,000) கல்விக்கடனை இரத்து செய்வதாக ஜனாதிபதி பைடன் அறிவித்துள்ளார். இதன்மூலம் 74 ஆயிரம் பேர் பயனடைய உள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தற்போது ஆசிரியர், தாதியர் என அரசு ஊழியர்களாக பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.



உத்தரப் பிரதேசம்

## “ராமர் கோயிலில் தாக்குதல் நடத்துவோம்”

### பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் பகிரங்கமாக எச்சரிக்கை



உத்தரப் பிரதேசம், அயோத்தியில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள ராமர் கோவில் திறப்பு விழா ஜனவரி 22ஆம் திகதி (இன்று) நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி, மடாதிபதிகள், அரசியல் தலைவர்கள், திரையுலகம், விளையாட்டு துறை பிரபலங்கள், வெளிநாட்டு தலைவர்கள் என மிகவும் மிக முக்கியமான 11,000 நபர்கள் பங்கேற்க உள்ளனர்.

“ராமர் கோயில் திறப்பு விழாவின்போது தாக்குதல் நடத்துவோம்” என்று பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும், ராமர் கோவில் திறப்பு விழாவின்போது தற்கொலைப்படை தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்காரணமாக அயோத்தி நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

தேசிய பாதுகாப்பு படை (என்எஸ்ஜி), தீவிரவாத தடுப்புப் படை, சிறப்பு கமாண்டோ படை, சிஆர்பிஎப், மத்திய தொழில் பாதுகாப்பு படை, மாநில பொலிஸார் என சுமார் 30,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் செயல்படும் 11,000-க்கும் மேற்பட்ட கேமராக்கள் அயோத்தி முழுவதும் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த கேமராக்கள் மூலம் பழைய குற்றவாளிகளின் முகங்களை அடையாளம் காண முடியும். ட்ரோன்களை சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகள், கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

அயோத்தி மட்டுமன்றி உத்தரப் பிரதேசம் மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக உத்தரப் பிரதேசத்தை ஒட்டியுள்ள நேபாளத்தின் 570 கி.மீ. தொலைவு எல்லைப் பகுதியில் தீவிர ரோந்து பணி நடைபெற்று வருகின்றது.



ஆந்திர பிரதேசம்

## உலகின் மிகப்பெரிய அம்பேத்கர் சிலை

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் உள்ள ஸ்வராஜ் மைதானத்தில் டாக்டர் அம்பேத்கரின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை சுமார் 125 அடி உயரம் கொண்டது. இது 81 அடி உயரம் கொண்ட பீடத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளதால், இதன் மொத்த உயரம் 206 அடியாக உள்ளது.

இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு ஸ்மிருதி வனம் என பெயரிடப்பட்டுள்ளது. அம்பேத்கரின் சிலைக்கு அருகே பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மைதானத்தில் மினி தியேட்டர், அருங்காட்சியகம், நீரூற்றுகள், வாகன நிறுத்துமிடம், உணவு விடுதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உலகின் மிகப்பெரிய அம்பேத்கர் சிலையை ஆந்திர மாநில முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி வெள்ளிக்கிழமை (19) திறந்து வைத்தார். இச்சிலை சமத்துவம், சமூக நீதியின் அடையாளம் என்பதால் ‘சமூக நீதி'க்கான சிலை என எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஐந்தாவது போட்டியில்

# நியூசிலாந்தை வீழ்த்திய பாகிஸ்தான்



நியூசிலாந்துக்கு எதிரான ஐந்தாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் நான்கு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்ற நியூசிலாந்து, 4-1 என தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 134/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் 38 (38), பக்கர் ஸமன் 33 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் செளதி 2/19 [4], இஷ் சோதி 2/22 [4], லொக்கி பெர்கியூசன் 2/25 [4], மற் ஹென்றி 2/30 [4], மிற்செல் சான்ட்னெர் 0/30 [4])

நியூசிலாந்து: 92/10 (17.2 ஓவ.) (துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 26 (22), பின் அலென் 22 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: இஃப்திஹார் அஹ்மட் 3/24 [4], மொஹமட் நவாஸ் 2/18 [4], ஷகீன் ஷா அஃப்ரிடி 2/20 [3.2], ஸமன் கான் [1], உஸாமா மிர் 1/21 [4], அப்பாஸ் அஃப்ரிடி 0/4 [1])

போட்டியின் நாயகன்: இஃப்திஹார் அஹ்மட்

தொடரின் நாயகன்: பின் அலென்



ட்ரிப்பியர்:

## மியூனிச்சை நிராகரித்த நியூகாசில்

தமது பின்களவீரரான கெய்ரன் ட்ரிப்பியருக்கான ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் அணுகலை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான நியூகாசில் யுனைட்டெட் நிராகரித்துள்ளது.

நியூகாசிலுடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு மியூனிச் இணங்கினால் இம்மாதம் மியூனிச்சில் இணைய 33 வயதான ட்ரிப்பியர் ஆர்வமாயுள்ளார்.

உலக பூப்பந்தாட்ட பேரவையின் இரண்டாம் மட்ட பயிற்சிநெறியை

## வடக்கிலிருந்து முதன்முறையாக பூர்திய செய்த கமலன்

■ நடராசா கிருஸ்ணகுமார்



உலக பூப்பந்தாட்ட பேரவையின் சர்வதேச தர இரண்டாம் மட்ட பயிற்சி நெறியை வட மாகாணத்தில் முதல் தடவையாக நிறைவு செய்து சித்தியடைந்த வடக்கு கிழக்கின் முதல் தமிழரான மாகாண பூப்பந்தாட்ட பயிற்றுனர் தவராசா கமலன் விளங்குகின்றார்.

இம்மாதம் நடைபெற்ற முடிவுறுத்தியதாக மேற்படி பயிற்சி நெறி கொழும்பு பூப்பந்தாட்ட உள்ளக அரங்கில் தெரிவு செய்யப்பட்ட 20 பேரடங்கிய தேசிய பூப்பந்தாட்ட பயிற்றுனர்கள், தேசிய வீரர்களையும் உள்ளடக்கியதாக உலக பூப்பந்தாட்ட பேரவையால் அதன் வளவாளர்களால் நடத்தப்பட்ட மேற்படி சர்வதேச தர இரண்டாம் மட்ட பயிற்சியாளர்களுக்கான இப்பயிற்சிநெறியில் 15 பேர் மட்டும் சித்தியெய்தி பயிற்சியை நிறைவு செய்தனர்.

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:

## வெளியேறிய சிட்டிபாஸ்

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் ஏழாம் நிலை வீரரான ஸ்டெபனோஸ் சிட்டிபாஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற தனது நான்காவது சுற்றுப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் டெய்லர் பிறிட்ஸை எதிர்கொண்ட கிரேக்கத்தின் சிட்டிபாஸ், 6-7 (3-7), 7-5, 3-6, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.





ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

## லெய்ப்ஸிக்கை வென்ற லெவர்குசன்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், ஆர். பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் பயேர் லெவர்குசன் வென்றது.

லெவர்குசன் சார்பாக, நாதன் டெல்லா, ஜொனதன் தஹ், பியர்ரோ ஹின்கபி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லெய்ப்ஸிக் சார்பாக ஸ்கெவி சிமொன்ஸ், லொய்ஸ் ஒபென்டா ஆகியோர் தாலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 48 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லெவர்குசன் உள்ளது. இரண்டாமிடத்தில் 41 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச்சும், 34 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் வி.எஃப். பி ஸ்டட்கார்ட்டும், 33 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லெய்ப்ஸிக்கும் காணப்படுகின்றன. பொரூசியா டொட்ட முண்டும் 33 புள்ளிகளுடன் உள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் ஐந்தாமிடத்திலுள்ளது. இதில் மியூனிச் இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 22 , ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.